<u>முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி</u>

நாள்: 09.03.2026,அ.வ.எண். 227/2016 ,வா.சா.1.பாலசுப்பிரமணியம், த/பெ. லட்சுமணன்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு  பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) எந்த சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வண்டித்தடத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 12 அடி தடத்தில் நான் சென்று கொண்டு இருக்கிறேன் அதை பிரதிவாதிகள் தடை செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த பத்திரத்தின் அடிப்படையில் 12 அடி தடம் கேட்கிறேன் என்றால் ஆவணங்கள் எதுவும் இல்லை மாமூல் தடம் 2014 ம் ஆண்டு நான் கிரயம் செய்த பத்திரத்தில் கண்டுள்ளது.

2)  என்னிடம் காட்டப்படும் வாசா ஆ 4 நான் கிரயம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதி மற்றும் அவரது மகனிடம் இருந்து கிரயம் பெற்றேன் என்றால் சரிதான், மேற்படி வா சா ஆ 4 ஆவணத்தில் 12 அடி தடம் எங்கு கண்டுள்ளது என்றால் வாதி ஆவணத்தை  பார்த்துவிட்டு எதுவும் கூறவில்லை. மேற்படி ஆவணத்தில் தடம் எதுவும் கண்டில்லை என்றால் சரிதான். தாவா ஏ அட்டவணை சொத்து வா சா ஆ 4ல் கண்டுள்ள சொத்து என்றால் சரிதான். தாவா பி  அட்டவணை சொத்து வா சா ஆ 4 ல் கண்டில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை ஆணையர் வந்து பார்வையிட்டார் என்றால் சரிதான்.

3) அவரது அறிக்கையில் 1 ம் பிரதிவாதிக்கு கிழமேல் 9 அடி என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. வீல் மார்க் தடம் 9 அடி என்று தான் கண்டுள்ளது. ஆணையர் வரைபடத்தில் 9 அடி என்று குறிப்பிட்டுள்ளார் என்றால்

ஒப்பம்/-(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

சரிதான். மீதி 3 அடியை அளந்து காண்பிக்க சொல்லி கேட்டேனா என்றால் இல்லை.

குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/-(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி